செய்தி வெளியீடு எண் : 177 நாள் : 15.03.2013

# கூட்டுறவுச் சங்கத் தேர்தல்

## பார்வையாளர்கள் நியமனம்

### தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறும் என்றும் முதல்நிலையில் தேர்தல் நடைபெறும் 22,192 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஏப்ரல் 5–ஆம் தேதி தொடங்கி நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் கடந்த 04.03.2012 அன்று அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

**மாநில தேர்தல் அலுவலர்கள் :**

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்த கீழ்க்கண்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மாநிலத் தேர்தல் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| பெ.சீத்தாராமன் | – | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் |
| உ.சகாயம் | – | முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் |
| மகேசன் காசிராஜன் | – | சர்க்கரை துறை இயக்குநர் |
| டாக்டர்.முத்துவீரன் | – | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் |
| எம்.ராஜேந்திரன் | – | வேளாண்மைத் துறை இயக்குநர் |
| டாக்டர்.டி.கே.ராமச்சந்திரன் | – | பால்வளத்துறை ஆணையர் |
| மீனாட்சி ராஜகோபால் | – | சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை |
| சி.முனியநாதன் | – | மீன்வளத் துறை இயக்குநர் |
| அரமந்தர்சிங் | – | தொழில் வணிகத்துறை இயக்குநர் |
| டாக்டர்.பி.பழனிச்சாமி | – | கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் |
| வி.எம்.சேவியர் கிரிசோ நாயகம் | – | சமூக நலத்துறை இயக்குநர் |
| எஸ்.விஜயகுமார் | – | ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் |
| வெ.பிரபாகரன் | – | பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் |
| எம்.ராஜசேகர் | – | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் |

**பார்வையாளர்கள் நியமனம் :**

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நியாயமாகவும், அமைதியாகவும், விதிமீறல்கள் இன்றியும் நடைபெறுவதை கண்காணிக்க மாவட்டத்திற்கு ஒரு அலுவலர் வீதம் 32 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ப.நி) தெரிவித்துள்ளார். சென்னை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சென்னை மாவட்ட தேர்தல் பார்வையாளராகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள் நிலையில் இதர மாவட்டங்களுக்கு தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தேர்தல் பார்வையாளர்கள் மாவட்டம் முழுவதிலும் உள்ள பதிவாளர் மற்றும் செயல்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துவகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**பார்வையாளர்கள் விபரம் :**

தமிழகத்தில் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வாரியான பார்வையாளர்கள் விபரம் வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை | – | ஆர்.எம்.ஜெயம்பாண்டியன் | – | கூடுதல் பதிவாளர் |
| அரியலூர் | – | முருகன் | – | இணைப்பதிவாளர் |
| கோயம்புத்தூர் | – | ஆர். இராமமூர்த்தி | – | இணைப்பதிவாளர் |
| கடலூர் | – | பி. ரேணுகாம்பாள் | – | இணைப்பதிவாளர் |
| தர்மபுரி | – | எஸ். இராமதாஸ் | – | இணைப்பதிவாளர் |
| திண்டுக்கல் | – | டி. செல்வகுமரன் | – | இணைப்பதிவாளர் |
| ஈரோடு | – | டி. பிரபு | – | இணைப்பதிவாளர் |
| காஞ்சிபுரம் | – | ஜெ. மலர்விழி | – | இணைப்பதிவாளர் |
| கன்னியாகுமரி | – | வி.எம். கலைச்செல்வன் | – | இணைப்பதிவாளர் |
| கரூர் | – | எம். சந்தானம் | – | இணைப்பதிவாளர் |
| கிருஷ்ணகிரி | – | ஏ. கிருஷ்ணமூர்த்தி | – | இணைப்பதிவாளர் |
| மதுரை | – | எம். பழனிவேலு | – | இணைப்பதிவாளர் |
| நாகப்பட்டினம் | – | என். மிருணாளனி | – | இணைப்பதிவாளர் |
| நாமக்கல் | – | எஸ். முத்துக்குமாரசாமி | – | இணைப்பதிவாளர் |
| நீலகிரி | – | ஆர். வனிதா | – | இணைப்பதிவாளர் |

| | | |
|---|---|---|
| பெரம்பலூர் | எம். உமாமகேஸ்வரி | இணைப்பதிவாளர் |
| புதுக்கோட்டை | கே.வி.எஸ். குமார் | இணைப்பதிவாளர் |
| இராமநாதபுரம் | பி. ஆரோக்கியசுகுமார் | இணைப்பதிவாளர் |
| சேலம் | வி. லட்சுமி | இணைப்பதிவாளர் |
| சிவகங்கை | ஜி. காந்திநாதன் | இணைப்பதிவாளர் |
| தஞ்சாவூர் | எம். அந்தோணிசாமி ஜான் பீட்டர் | இணைப்பதிவாளர் |
| தேனி | கே.எம். வெள்ளியங்கிரி | இணைப்பதிவாளர் |
| திருநெல்வேலி | ஆர். தயாளன் | இணைப்பதிவாளர் |
| திருப்பூர் | எஸ். பாபு | இணைப்பதிவாளர் |
| திருவள்ளூர் | ஏ.ஜி. சந்திரசேகர் | இணைப்பதிவாளர் |
| திருவாரூர் | ஆர். பிருந்தா | இணைப்பதிவாளர் |
| திருச்சி | ஜி. ராஜேந்திரபிரசாத் | இணைப்பதிவாளர் |
| தூத்துக்குடி | கே. பாண்டியன் | இணைப்பதிவாளர் |
| திருவண்ணாமலை | திருகுண ஐயப்பத்துறை | இணைப்பதிவாளர் |
| வேலூர் | எஸ்.ஆர். வெங்கடேசன் | இணைப்பதிவாளர் |
| விழுப்புரம் | ஏ.பாலகிருஷ்ணன் | இணைப்பதிவாளர் |
| விருதுநகர் | எஸ். குருமூர்த்தி | இணைப்பதிவாளர் |

<u>பயிற்சி :</u>

கூட்டுறவுத் தேர்தல்களை திறம்பட நடத்துவதற்கு அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் மார்ச் 2 மற்றும் 3–ஆம் தேதி சென்னையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது என்றும் தேர்தல் பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு மார்ச் 10–ஆம் தேதி சென்னையில் நடத்தப்பட்டது என்றும் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ப.நி) தெரிவித்துள்ளார். இங்கு பயிற்சி பெற்றவர்கள் மாவட்டத்தில் உள்ள தேர்தல் அலுவலர்களுக்கு மாவட்டங்களில் பயிற்சி அளித்து வருகின்றனர் என்றும், தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு தயாரிக்கப்பட்டு தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**வாக்காளர் பட்டியல் வெளியீடு :**

முதல் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் **5855** சங்கங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் **27.03.2013** அன்று வெளியிடப்படும் என்றும், இரண்டாம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் **5603** சங்கங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் **01.04.2013** அன்றும், மூன்றாம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் **5481** சங்கங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் **06.04.2013** அன்றும், நான்காம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் **5253** சங்கங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் **12.04.2013** அன்றும் வெயிடப்படும் என்றும், வாக்காளர் பட்டியல் முறையாக வெளியிடப்படுவதை தேர்தல் பார்வையாளர்கள், கண்காணிப்பாளர்கள் என்றும் தேர்தல் ஆணையர் மேலும் தெரிவித்துள்ளார்.

**போலீஸ் பாதுகாப்பு :**

முதல் நிலையில், நான்கு கட்டங்களாக நடைபெறும் தேர்தலின்போது, வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல் செய்தல், தேர்தல் நடத்துதல், பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவித்தல் ஆகிய முக்கியமான நிகழ்வுகளின்போது அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் தடுக்க போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள காவல்துறையை ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது என்று தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.